**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டம் என்பவற்றின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.
இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.
இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.
நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.
இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.
- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.
- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.
- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள்

கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்க" ர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,
- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,
- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,
- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்க" ர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளல், பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்தல், முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதித்தல், பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்தல், ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் என்பன நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை “திட்டமிட்டு பேணுதல்” நிறுவனத்திற்குத் தேவையாக உள்ளது.

### 1.5.2 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்குச் சொந்தமான சேகரிப்புக் கணக்கு ஒன்றிலே (Collection Account) மீளாய்வு ஆண்டின் இறுதியில் நிலவிய ரூ.1,609,500 பெறுமதியான தொகையுடன் தொடர்புடைய பெறுகைகள் கணக்குகளில் பதியப்பட்டிருக்கவில்லை. | ஆணைக் குழுவின் அறவீட்டுக் கணக்கு ஒன்றான இக்கணக்கின் மீதி ஒவ்வொரு மாதத்தினதும் இறுதித் தினத்தன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் இலக்கம் 2323284 உடைய நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்படுகின்றது. எனினும், இவ்வாறு பணத்தினை மாற்றும் போது 2018.12.31 ஆம் திகதியன்று இறுதி வங்கி மீதியானது 2019.01.01 ஆம் திகதின்றே மாறியுள்ளது. அதன் பிரகாரம் குறித்த தொகை 2019.01.01 ஆம் திகதியன்று கணக்கு பதிவு வைக்கப்பட்டுள்ளது. | கணக்கு காலப் பகுதியுடன் தொடர்புடைய அனைத்து கணக்கு மீதிகளும் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்குதல் வேண்டும். |
| **(ஆ)** | ஆணைக்குழுவின் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து செயலாற்றுகை கூற்றிற்கு மீளாய்வு ஆண்டிற்குரிய வருமானமாக ரூ.80,023,316 தொகை மாற்றி இருப்பதன் காரணமாக மீளாய்வு ஆண்டிற்கான நிதி செயலாற்றுகை அறிக்கையின் உண்மை பற்றாக்குறையான ரூ.5,319,171 பெறுமதியான தொகை கணக்குகளில் உள்ளடக்கப்படாது ரூ.74,704,144 பெறுமதியான மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. | 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழக சட்டத்தின் இலக்கம் 10 (1) உடைய பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உழைக்கும் வருமானத்தின் மூலம் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அபிவிருத்தி நிதியம் நிறுவப்பட்டுள்ளதுடன், பல்கலைக்கழக சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றி வருவதற்காக அரசாங்க நிதிகள் போதியதாக இல்லாத சந்தர்ப்பங்களில், அந்நிதியம் ஆணைக்குழுவின் அனுமதியுடன் பயன்படுத்தப்படும். அதற்காக பல்கலைக்கழக சட்டத்தின் இலக்கம் 10(3) பிரிவு மற்றும் நிதி அமைச்சின் 2004.04.30 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. | நிதி செயலாற்றுகைக் கூற்றின் ஊடாக ஆண்டிற்குரிய மீண்டுவரும் வருமானம் மற்றும் செலவினம் மாத்திரம் இனங்காணப்பட வேண்டியுள்ளதுடன், அதன் பிரகாரம் ஏற்படுகின்ற மிகை அல்லது பற்றாக்குறை பற்றி வெளிப்படுத்தல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் பெறுபேறு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூ.74,704,144 பெறுமதியான மிகையாக அமைந்ததுடன், அதை நேரொத்தாத முன்னைய ஆண்டின் மிகை ரூ.72,658,248 ஆக அமைந்திருந்தது. அதன் பிரகாரம் நிதி பெறுபேறுகளில் ரூ.2,045,896 பெறுமதியான விருத்தி ஒன்றினைக் காட்டுகின்றது. இந்த விருத்திக்கு அபிவிருத்தி நிதியத்திலிருந்து போலியான முறையில் மாற்றப்பட்ட ரூ.80,023,316 பெறுமதியான தொகை வருமானமாகக்

கொண்டிருத்தல் மற்றும் பிற பரிமாற்றுக் கொடுப்பனவுகள் அதிகரித்தல் என்பன காரணமாக அமைந்திருந்தன.

## 2.2 பிரதான வருமானம் மற்றும் செலவின விடயங்களின் முன்னேற்றப் பகுப்பாய்வு

மீளாய்வு ஆண்டிலே தொழிற்பாட்டுச் செலவினமான ரூ.2,457,100,115 தொகை முன்னைய ஆண்டின் தொழிற்பாட்டுச் செலவினமான ரூ.1,984,149,873 உடன் ஒப்பிடுகையில் ரூ.472,950,242 எனும் 23 வீத அதிகரிப்பு ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இவ்வாறு செலவினம் அதிகரிப்பதற்கு மஹபொல புலமைப் பரிசில் செலவினம் ரூ.410,512,250 தொகையால் அதிகரித்தமை பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வு ஆண்டிலே நடைமுறை விகிதம் 2.07:1 ஆகக் காணப்பட்டதுடன் கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 40 வீத வீழ்ச்சி ஒன்றினைக் காட்டுகின்றது.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

## 3.1 தொழிற்பாட்டு செயற்றிறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017/2018 கல்வி ஆண்டினுள் பல்கலைக்கழக கல்விக்கு தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகங்களுக்கு தகைமை பெறுவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18 வீதமாகக் காணப்பட்டதுடன், கடந்த 03 கல்வி ஆண்டுகளில் பல்கலைக்கழகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 3,434 முதல் 118 வரையில் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. இதன் பிரகாரம் கல்விக்காக தகைமை பெற்ற மாணவர்களின் அதிகரிப்பிற்கு ஏற்ப பல்கலைக்கழகங்களுக்கு சேர்த்துக் கொள்ளப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கையானது ஒப்பீட்டு அளவில் குறைவொன்றைக் காட்டியிருந்தது. | 2017/2018 கல்வி ஆண்டிற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையானது 2016/2017 கல்வி ஆண்டுடன் ஒப்பிடுகையில் 118 இனால் குறைவடைந்துள்ளது என்பதற்குப் பதிலாக 783 ஆல் அதிகரித்துள்ளது எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். அவ்வாறே 2017/2018 கல்வி ஆண்டின் பல்கலைக்கழக கல்விக்காக தகைமை பெற்ற மாணவர்களில் பல்கலைக்கழகத்திற்கு உள்வாங்குவதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 18 வீதம் எனக் குறிப்பிடப்பட்டுள்ள அளவானது 19 வீதம் என சரிப்படுத்தப்படல் வேண்டும்.<br><br>2017/2018 ஆண்டிலே 2016/2017 ஆண்டுடன் (71,106) ஒப்பிடுகையில் ஒப்பீட்டு ரீதியாக பல்கலைக்கழக நுழைவிற்காக அதிகமான மாணவர்கள் விண்ணப்பித்துள்ளமையால் 2017/2018 (78,894) ஆண்டிலே அந்த வீதமானது குறைந்துள்ளதாகக் காட்டுகின்றது. | அரச பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டிலே உள்வாங்கிய தொகையுடன் ஒப்பிடுகையில் அதிக தொகையால் உயர்த்துவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | பல்கலைக்கழகங்களுக்கு வருடாந்த மாணவர்கள் உள்வாங்கப்படுகின்ற பல்வேறு பாடநெறிகள் தொடர்பில் தகைமை பெறுகின்ற மாணவர்கள் அந்த பாடநெறிகளின் கீழ் பதிவு செய்யாமை, பதிவு செய்த மாணவர்கள் பிற பாடநெறிகளுக்கு மாறுதல், பிற அரசாங்க உயர் கல்வி நிறுவகங்களில் பாடநெறிகளை தொடருதல், உள்ளிட்ட காரணங்களின் மீது பதிவினை இரத்துச் செய்துகொள்ளல் மற்றும் தொடர்ந்தும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டாமென பல்கலைக்கழகங்களினால் அறிவித்தல் உள்ளிட்ட காரணங்களின் மீது 2017/2018 அண்மித்த கல்வி ஆண்டின் வெற்றிடங்கள் 897 மற்றும் 2014/2015, 2015/2016, 2016/2017 ஆகிய கல்வி ஆண்டுகள் 03 இல் முறையே 738, 2226 மற்றும் 1455 ஆக வெற்றிடங்கள் நிலவின. | 2017/2018 கல்வி ஆண்டிலே சாதாரண நுழைவு மற்றும் வெற்றிட நிரப்புதல் சுற்றுக்கள் எட்டு என்றவாறு 09 சுற்றுக்கள் அமுல்படுத்தப்பட்டுள்ளது. இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான சுற்றுக்களின் போது நிலவுகின்ற வெற்றிடங்களின் முழு எண்ணிக்கைக்கும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்ற போதிலும், அவ்வாறு தெரிவுசெய்யப்படுகின்ற ஒருசில மாணவர்கள் பல்வேறு காரணங்களின் மீது தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளில் பதிவு செய்துகொள்வதில்லை. | பல்கலைக்கழகங்களில் நடாத்திச் செல்லப்படுகின்ற கல்வி பாடநெறிகள் தொழில் சந்தைகளின் தேவைகளை மையமாகக் கொண்டு திருத்தியமைத்தல் வேண்டும். அரச பல்கலைக்கழகங்களை விட்டுச் செல்லல், மாணவர்கள் பதிவு செய்யாதிருத்தல் என்பவற்றினை குறைப்பதற்கு ஏற்றவாறு தாமதமின்றி உயர் தர பெறுபேறுகள் மற்றும் பல்கலைக்கழக நுழைவிற்கான வெட்டுப் புள்ளி என்பன வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | 2011 சனவரி 25 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் உள்;ர் பல்கலைக்கழகங்களுக்கு வெளிநாட்டு தகைமை பெற்ற மாணவர்களை உள்வாங்கும் போது உத்தேச மொத்த மாணவர்கள் தொகையில் 0.5 வீதமான மாணவர்களை உள்வாங்கக் கூடியதாக இருந்த போதிலும் கடந்த 05 வருட காலத்தினுள் உத்தேச மற்றும் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையானு 09 வீதத்திற்கும் 50 வீத்தத்திற்கும் இடையிலான வித்தியாசத்தில் காணப்பட்டது. | ஒருசில பாடநெறிகளுக்கு உத்தேச மொத்த மாணவர்களின் எண்ணிக்கையை விடவும் உள்வாங்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைவதற்கு காரணம் விண்ணப்பித்த மாணவர்களின் தொகை குறைவடைதல், அதிகமான பாடநெறிகளுக்கு எதுவித விண்ணப்பமும் கிடைக்கப்பெறாமை, ஆகக் குறைந்த தகைமை பெறாத மாணவர்களின் விண்ணப்பங்களை இரத்துச் செய்ய வேண்டி ஏற்படல், தெரிகுழு மற்றும் குறித்த பீடசபைகள் திருப்தியடைகின்ற பெறுபேறுகளை விண்ணப்பதாரர்கள் பெற்றிராமை என்பன காரணமாக விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படல் உத்தேச மொத்த இடங்களுக்கு உள்வாங்கப்படுகின்ற கொழும்பு நகரத்திற்கு வெளியிலுள்ள பல்கலைக்கழகளுக்கான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு வெளிநாட்டு தகைமை பெற்ற மாணவர்கள் விரும்பாமை | வெளிநாட்டு மாணவர்களுக்கு ஒதுக்கியுள்ள 0.5 வீதம் மாணவர்களை இணைத்துக் கொண்டதன் பின்னர் தொடர்ந்தும் நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு உள்;ர் மாணவர்களுக்கு வாய்ப்பளித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ளிட்ட காரணங்கள் தாக்கம் செலுத்தின. | |
| **(ஊ)** | 2012 ஆம் ஆண்டிலே பல்கலைக்கழகளுக்கு மாணவர்களை உள்வாங்குதல் தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டிருந்த பல்கலைக்கழக நுழைவுக் கொள்கைக்கு புறம்பான விதத்தில் ஆணைக்குழுவின் தீர்மானத்தின் மீது அரச பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர் கல்வி நிறுவனங்கள் 13 நடாத்திச் செல்லப்படுகின்ற 25 பாடநெறிகள் தொடர்பில், உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்குப் புறம்பான விதத்தில் சாத்தியவள பரீட்சை ஒன்றினை நடாத்தி அதன் மீது பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை உள்வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. அக்கொள்கை களனி பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறிக்கு அமுல்படுத்தியமையால் அப்பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் ‘‘z’’ பெறுமதியை விடவும் அதிகமான ‘‘z’’ பெறுமதியினைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள் தகுதிகாண் பரீட்சையில் 70 -82 இடைப்பட்ட புள்ளிகளில் இருந்த போதிலும் 09 மாணவர்கள் இதில் உள்வாங்கப்படுவதற்கு வாய்ப்புக் கிட்டவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவரினால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்குப் பதிலாக களனி பல்கலைக்கழகத்தின் 2017/2018 கல்வி ஆண்டிற்காக நடாத்தப்பட்ட பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறிக்கு மாணவர் பட்டியல் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிடம் பெற்றுக்கொடுக்கப்பட்டது. அதன் பிரகாரம், அந்த பட்டியலில் குறிப்பிடப்பட்ட மாணவர்களின் Z-புள்ளிகளின் ஒழுங்குமுறை, அவர்கள் பாடநெறிக்கு விருப்பம் தெரிவித்துள்ள விருப்பத்தின் ஒழுங்கு முறை மற்றும் ஒவ்வொரு மாவட்டத்தினதும் பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறிக்கு ஒதுக்கியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை பிரகாரம் 2017/2018 கல்வி ஆண்டிலே களனி பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறிக்கு மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறியின் செயல்முறை/தகுதிகாண் பரீட்சையில் 70 வீத புள்ளிகளை அல்லது அதற்கு மேலதிகமாகப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் மாத்திரம் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களாக கவனத்திற் கொள்ளுமாறு களனி பல்கலைக்கழகத்தினால் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு நேரடியாக அறிக்காமை காரணமாகவும், 2018 ஆகஸ்ட் 09 ஆம் திகதி நடைபெற்ற பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 992 சபை கூட்டத்தின் போது 2017/2018 கல்வி ஆண்டிலே களனி பல்கலைக்கழகத்தின் பேச்சு மற்றும் கேட்டல் பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் அந்த பாடநெறியை பயிலுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. | நாடளாவிய ரீதியில் நடாத்தப்பட்ட க.பொ.த. உயர் தர பரீட்சையில் பெற்றுக்கொண்ட பெறுபேற்றினை கவனத்திற் கொண்டு பல்கலைக்கழகத்திற்கு மாணவர்களை உள்வாங்குதல் வேண்டும். |
| **(உ)** | இணையத் தளம் ஊடாக பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பிக்கும் முறைமை ஆரம்பிக்கப்பட்ட 2014/2015 கல்வி ஆண்டிலே இணையத்தளம் ஊடாகவும் மற்றும் சாதாரண | இணையத்தின் ஊடாக பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பிப்பதற்காக 2014/2015 கல்வி ஆண்டை விடவும் 2015/2016 கல்வி ஆண்டிலே மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டியிருந்தமையால் | இணைய முறைமையை பயன்படுத்தி பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பிக்கும் போது விண்ணப்பதாரர்கள் |

| | | |
|---|---|---|
| முறைமையின் கீழ் பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பிப்பதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.<br>அவ்வாறாயினும் 2017/2018 கல்வி ஆண்டாகும் போது பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பித்தல், தெரிவு செய்யப்பட்ட பாடநெறி மற்றும் பல்கலைக்கழகங்களுக்கு இணையத்தின் ஊடாக பதிவ செய்தல் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.<br>இந்த முறைமைக்கு மீளாய்வு ஆண்டிலே ரூ.9,347,750 செலவிடப்பட்டிருந்ததுடன், 2018 ஆம் ஆண்டு முதல் ஆண்டு ஒன்றிற்கு ரூ.700,000 பெறுமதியான பராமரிப்பு செலவினமொன்று ஏற்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. இந்த முறைமையின் கீழ் பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணபிக்கும் போது 2015/2016 கல்வி ஆண்டுகளில் 1081 ஆகக் காணப்பட்ட பிரச்சினைகள் தொகையானது 2018/2019 கல்வி ஆண்டாகும் போது 5602 ஆக அதிகரித்துள்ளது. | அந்நிலையினைக் கருத்திற் கொண்டு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் 2016/2017 கல்வி ஆண்டு முதல் பல்கலைக்கழக நுழைவிற்கு விண்ணப்பம் கோரல் இணையத்தின் ஊடாக மாத்திரம் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. 2015/2016 கல்வி ஆண்டு முதல் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு பதிவு செய்யும் பணிகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் இணையத்தின் ஊடாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. அதன் போது மாணவர்கள் பாடநெறிகளில் பதிவு செய்யாது விடுவதன் மூலம் ஏற்படுகின்ற வெற்றிடங்களை மிக விரைவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்ததுடன், அதன் மூலம் வெற்றிடங்களை மிகவும் துரிதமாக நிரப்ப முடிந்தது. | முகம் கொடுக்கின்ற பிரச்சினைகளை குறைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கையினை எடுத்தல் வேண்டும். |

## 3.2 நிதி குறை பயன்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குவின் கீழ் பேணி வரப்படுகின்ற கூட்டுத் தொகை 39.2 மில்லியன் ரூபாவான நிதிய மீதிகள் சில வருடங்களாக செயற்பாடாது காணப்பட்டன.. | ஆராய்ச்சி நிதியம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் பின்வருமாறு.<br>*பரிசு நிதியத்தின் கீழ் புலமைப் பரிசில் வழங்கும் நிதியங்கள் 14 உள்ளன. 2018 ஆம் ஆண்டிலே அதன் கீழ் 30 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளதுடன், கல்விப் பிரிவால் தொடர்ந்தும் புலமைப் பரிசில் வழங்குவதற்காக பல்கலைக்கழக மாணவர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.<br><br>* மத்திய ஆராய்ச்சி நிதியமானது பல | நிதியத்த்தினை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வருடங்களாக செயலிழந்து காணப்பட்டமையால் 2018.04.04 ஆம் திகதி நடைபெற்ற 984 ஆவது சபை கூட்டத்தின் போது அதன் மீதியை பட்டப்பின் படிப்பினை தொடருவதற்காக நிதியுதவி வழங்கும் செலவினத் தலைப்பிற்கு அனுமதி வழங்கப்பட்டது.<br><br>* சுனாமி நிதியம் தாபிக்கப்பட்டதுடன், அந்த புலமைப் பரிசில் வழங்குதல் தற்போது முடிவடைந்துள்ளது. அதன் பிரகாரம் 2018.07.12 ஆம் திகதி நடைபெற்ற 990 ஆவது சபை கூட்டத்தின் போது இந்நிதியத்தின் மீதி பல்கலைக்கழக புலமைப் பரிசில் நிதியத்திற்கு மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட்டது. | |
| **(ஆ)** | நிதியத்தின் 20 கணக்குகளின் கூட்டுத் தொகை 33.6 மில்லியன் ரூபா குறை பயன்பாடுடையதாகக் காணப்பட்டது. | Central Research நிதியத்தின் மிதி 2018 ஆண்டிலே பட்டப்பின் படிப்பு வழங்குகின்ற செலவினத் தலைப்பிற்கு மாற்றுவதற்கு ஆணைக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டது. எனவே அந்நிதியத்தின் மீதி முதலீடு செய்யப்படவில்லை. நிலையான வைப்பு 2019.01.17 ஆம் திகதியன்று காலம் நிரம்பியதுடன் செலவினத் தலைப்பிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br><br>Bond Violation நிதியத்தின் 09 மீதிகளில் ஒரு தொகை முதலீடு செய்யப்பட்டுள்ளது. Flood Relief நிதியம் வெள்ளம் மற்றும் மண் சரிவு உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்களுக்கு வழங்கப்பட்ட நிதி மீள வழங்கும் தவணைகளுடன் ஒன்றுசேரும். இது பற்றி பொது திறைசேரியிடம் வினவியதன் பின்னர் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.<br>தற்போது இந்நிதி நாளாந்தம் Overnight Investment ஆக முதலீடு செய்யப்படுகின்றது.<br>தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து UNESCO நிறுவனத்தினால் தயாரித்துள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் உயர் கல்வித் துறையின் ஆராய்ச்சிகள் மற்றும் அபிவிருத்திப் பணிகள் தொடர்பான குறிகாட்டி ஒன்றினைத் தயாரிப்பதற்காக National Science Fund நிறுவப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிலே கருத்திட்டத்துடன் தொடர்புடைய கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. இது தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டம் | நிதியத்தினை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

ஒன்றாக அமைவதனால், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அந்நிதி முதலீடு செய்யப்படுகின்றது.

**3.3 பெறுகை முகாமைத்துவம்**

---------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | தேசிய பெறுகை முகவர் நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 6.2.2 பிரிவின் பிரகாரம் சந்தைவிலை இணக்க முறைமையின் கீழ் அவசர பெறுகை தவிர்ந்த ஏனைய விலை கோரல் ஆகக் குறைந்த கால எல்லை 07 நாட்களாகும். அவ்வாறாயினும் ஆணைக்குழுவானது ரூ.762,805 பெறுமதியான காகிதாதிகள் 02 கொள்வனவு சந்தர்ப்பங்களின் போது அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | 2018.06.25 திகதி உடைய காகிதாதிகள் (A 4 கடதாசி) கொள்வனவுகள் 2018.06.21 திகதியன்று நேர் வரிசை அமைச்சினால் ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள் பாராளுமன்றத்திடம் சமர்ப்பிப்பதற்கு தயாராக வைக்குமாறு விடுத்த அறிவித்தலின் பிரகாரம் அந்த அறிக்கைகளின் பிரதிகளை தயார்படுத்தி வைப்பதற்காகும். இந்த விடயம் அவசர சந்தர்ப்பம் ஒன்றாகக் காணப்பட்டமையால் ஸ்ரீ லங்கா ரெலிகொம் ரேன்போ பக்கங்களில் பதிவு செய்த வழங்குநர்கள் மூவரிடம் முத்திரையிடப்பட்ட விலை மனுக்களைப் பெற்றுக்கொண்டு இப்பணி நிறைவேற்றப்பட்டது.<br>2018.10.03 திகதியன்று (A 4 கடதாசி) கொள்வனவானது எமது நிறுவனத்தின் கீழுள்ள ஆண் பெண் பால் நிலை சமத்துவம்.׃. நியாயத்துவம் பற்றிய மையத்தினால் நடாத்திச் செல்லப்படுகின்ற "Study on ragging and sexual and Gender based on violence in the Sri Lankan University System" இனால் நடாத்தப்பட்டதுடன், இக்கருத்திட்டத்திற்கான நிதி பங்களிப்பானது யுனிசெப் நிறுவனத்தின் அறிவித்தலுக்கேற்ப நிதியினை தீர்க்கும் பணிகள் 2018 ஒக்தோபர் 09 ஆம் திகதிக்க முன்னர் மேற்கொள்ள வெண்டி இருந்ததனாலாகும். | அவசர தேவைக்காக பயன்படுத்துவதற்குத் தேவையான பொருள் மட்டத்தை பேணுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ஆ)** | தேசிய பெறுகை முகவர் நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 2.14.1 பிரிவின் பிரகாரம் ரூ.500,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய பொருட்களை கொள்வனவு செய்வதற்காக | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ரூ.973,365 பெறுமதியான காகிதாதிகள் 3 கொள்வனவு சந்தர்ப்பங்களின் போது சந்தை விலை இணக்க முறைமையின் கீழ் முத்திரை | ஒரே விதமான பெறுகைகளை மேற்கொள்ளும் போது தனித்தனியாக விலை கோருவதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | சந்தை விலை இணக்க முறைமையின் கீழ் பிராந்திய பெறுகை குழுவொன்றின் ஊடாக பகிரங்க விலைமனுக்கள் திறப்பு ஒன்றின் ஊடாக ஆகக் குறைந்தது 05 பேருக்குக் குறையாதவர்களிடம் முத்திரையிடப்பட்ட விலைமனு கோரல் ஊடாக மேற்கொள்ளல் வேண்டும். அவ்வாறாயினும் ரூ.973,365 பெறுமதியான காகிதாதிகளின் கொள்வனவிற்காக பிரசித்த விலைமனுக்கள் கோராது 2018 பெப்ரவரி 02 ஆம் திகதி 03 சந்தர்ப்பங்களின் போது 10 நிறுவனங்களுக்கு விலை கோரல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. | இடப்பட்ட விலை மனுக்களைப் பெற்றுக்கொண்டு பெறுகை கைநூலின் 34 ஆவது வெளியீட்டின் அதிகாரங்களின் கீழ் இப்பணி மேற்கொள்ளப்பட்டது. இதன் போது இந்த பெறுகை பணிக்காக 10 நிறுவனங்களிடம் விலை மனுக்கள் கோரி 08 நிறுவனங்களிடம் முத்திரை இடப்பட்ட விலை மனுக்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதன் போது சம்பந்தப்பட்ட கொள்வனவுகள் எப்போதும் இடம்பெற்றிருப்பது ஆகக் குறைந்த விலை வழங்கியுள்ள வழங்குநரிடமாகும். இது பெறுகை பணிகள் மூன்று என குறித்த அதிகார வரையறையினுள் உரிய அனுமதியின் கீழ் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | எடுக்காது ஒரே பெறுகை பணியாக கருதி செயலாற்றுதல் வேண்டும். |
| **(இ)** | தேசிய பெறுகை முகவர் நிறுவன சுற்றறிக்கை இலக்கம் 09 இன் 7.4.1 பிரிவின் பிரகாரம் முறையான அனுமதியினைப் பெற்றுக் கொள்வதற்கு போதிய காலம் வழங்கும் வகையில் விலைமனுக்களை மதிப்பீடு செய்வதற்கு இயன்றளவு விரைவாக மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், பெறுகை நேரசூசியில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறையினுள் விலை மனுக்களை மதிப்பீடு செய்தல் வேண்டும். அவ்வாறாயினும் 2018/2019 ஆண்டிற்கு சுத்திகரிப்பு சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக கோரியிருந்த விலை மனுக்களைத் திறத்தல் 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி மேற்கொண்டிருந்த போதிலும் அவ்வாறு திறந்த விலை மனுக்களை மதிப்பீடு செய்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் தீர்மானத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு சுமார் 100 நாட்களை அண்டிய காலப் பகுதியொன்று தாமதப்படுத்தப்பட்டிருந்தது. | 2018 பெப்ரவரி 14 ஆம் திகதி இந்த பெறுகையின் விலை மனுக்கள் திறக்கப்பட்ட போதிலும் 2018 பெப்ரவரி இறுதி வாரத்திலிருந்து கல்விசாரா ஊழியர்கள் 60 நாட்களுக்கு மேலாக பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டமையால் குறித்த விடயத்திற்குப் பொறுப்பான எழுதுநர்களின் ஆவண உதவியைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாது போனமையலும் குறித்த விலைமனுதாரர்கள் பற்றிய இரகசிய அறிக்கையினைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்பட்ட தாமதம் மற்றும்ஏனைய பெறுகை பணிகள் பணி பகிஷ்கரிப்பின் பின்னர் ஒரே முறையில் மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டமை உள்ளிட்ட காரணங்களின் மீது இந்த மதிப்பீடுகள் தாமதித்து இடம்பெற்றுள்ளன. | ஆணைக்குழுவிற்கு வினைத்திறனாக மற்றும் செலவு குறையும் வகையில் பெறுகை பணிகளை கால எல்லையின்றி மேற்கொண்டு குறித்த குழு தீர்மானத்தை வழங்குதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மாதிபி பரீசோதனையின் போது தெரியவந்தவாறு 2018/2019 ஆண்டுகளின் போது சுத்திகரிப்பு சேவை பெறுகையுடன் தொடர்புடைய பெறுகை செயற்பாட்டின் போது பெறுகை செயற்பாட்டிற்கு புறம்பாதல், விலை கோரல், திறத்தல், மதிப்பீடு செய்தல் உள்ளிட்ட பெறுகை செயற்பாடுகளில் பலவீனங்கள் நிலவின. எனவே மீண்டும் விலை கோரி மூன்றாவது ஆகக் குறைந்த விலையினை வழங்கி இருந்த விலை கூருநருக்கு வழங்கலை பெற்றுக் கொடுத்தமை காரணமாக சுத்திகரிப்பு பணிகளுக்கு ரூ.1,812,873 மேலதிகமாக செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. | 2018 ஆம் ஆண்டில் சுத்திகரிப்புப் பணிகளுக்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் விலைகோரி தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர் ஒப்பந்தத்தின் பிரகாரம் திருப்திகரமான முறையில் சேவை வழங்காமையால் அவரது ஒப்பந்தம் ஆணைக்குழுவின் அனுமதியுடன் முடிவுறுத்தப்பட்டது. | விலை மனுக்களை சமர்ப்பித்த விலைமனு தாரர்களில் வெற்றிகரமான விலைமனு தாரரை தேர்ந்தெடுக்கும் போது சமர்ப்பித்த விலைகூறல் விலைக்கு மேலதிகமாக சம நிறுவனங்களுக்குச் வழங்கிய சேவையின் நற்தன்மையினைக் கவனத்திற் கொண்டு பெறுகை குழு உறுப்பினர்கள் வெற்றிகரமான தீர்மானத்தை வழங்கவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டம். |
| (உ) | கணினி 5 கொள்வனவு செய்வதற்கு 2017 ஆம் ஆண்டிலே விலை மனுக்கள் கோரிஈ மீளாய்வ ஆண்டிலே தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசு வழங்கப்பட்டிருந்த போதிலும் பெறுகைக் குழுவினால் அந்த சிபாரிசை கவனத்திற் கொண்டிருக்காது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒரு உறுப்பினர் வழங்கியிருந்த தொழில்நுட்ப பிரச்சினை காரணமாக ஆகக் குறைந்த விலைமனு நிராகரிக்கப்பட்டிருந்தது.<br>பெறுகைக் குழுவினால் மீண்டும் விலை மனுக்கள் கோருவதற்கு வழங்கியிருந்த சிபாரிசினை அமுல்படுத்தாமை காரணமாக 1.2 மில்லியன் ரூபா செலவிட்டு 10 மாதங்களுக்கு வாடகை அடிப்படையின் மீது கணினிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் இரண்டாவது ஆகக் குறைந்த விலைமனு தாரரின் வாடகை அடிப்படையின் மீது கணினிகள் பெறப்படவில்லை. கணினிகள் வாடகைக்கு பெறப்பட்டிருப்பது ஆகக் குறைந்த விலைமனு குறிப்பிட்டிருந்த Data Core Lanka (Pvt) Ltd. நிறுவனத்திடமாகும். அனைத்து விபரங்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் மீதுபெறுகை பணிகளை மேற்கொள்ளல் வேண்டும். |